03.09.2025 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஓ.எஸ்.எண்.143/2019 ) திரு.ராமசுப்பு.

2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை-

1) தாவாச்சொத்தின் தற்போதைய பட்டாவில் 2 ம்பிரதிவாதியின் பெயரும் சேர்ந்துள்ளது என்றால் சரிதான். அந்த பட்டாவில் 3 முதல் 7 மற்றும் 8 நபர்கள் ஆக மொத்தம் 14 பேர்கள் பெயர்கள் கண்டுள்ளது என்றால் சரிதான். 2 ம்பிரதிவாதி தாவாச்சொத்தின் ஒரு பகுதியை கிரையம் வாங்குவதற்கு முன்பாக அந்த கூட்டுப்பட்டாவில் 2 ம்பிரதிவாதியின் விற்பனையாளர், 1 ம்பிரதிவாதி பெயர் உள்ளது என்றால் சரிதான். அதிலுள்ள மற்ற கூட்டுபட்டாதாரர்கள் என்னுடைய பங்காளிகள் என்றால் சரிதான். பட்டாவை ஆட்சேபித்து வருவாய் துறையில் இதற்கு முன்பு மனு எதுவும் கொடுக்கவில்லை என்றால் கொடுத்துள்ளேன் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. எந்த தேதியில் எந்த வருடம் வருவாய் துறையில் புகார் கொடுத்தேன் என்றால் தேதி ஞாபகமில்லை கொடுத்துள்ளேன். அதற்கான ஆதரவு எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவாச்சொத்துக்கு நீர் ஆதாரம் என்பது சர்வே எண்.302/4 ல் உள்ள கிணறு என்றால் சரிதான் ஆனால் சர்வே எண்.302/1 ல் கிணறு இல்லை. தாவாச்சொத்தை வாதிகள் அனுபவம் செய்கிறார்கள் என்பதை காட்டக்கூடிய தீர்வை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவாச்சொத்திற்கு வடக்கு பக்கம் மன்னார் நாயக்கர், சுப்பையா நாயக்கர், மேற்கு பக்கம் சத்திரப்பட்டி சுப்பா நாயக்கர் நிலம், கிழக்கு பக்கம்ச ங்கப்பரப்ப நாயக்கர் வகையறா நிலமாக இருந்து தற்சமயம் எங்கள் நிலமும் உள்ளது. தெற்கு பக்கம்அய்யப்ப நாயக்கர் நிலம் உள்ளது என்றால் இல்லை சங்கரப்ப நாயக்கர் மகன் வீரப்ப நாயக்கருக்கு நிலம் உள்ளது.

2) தாவாச்சொத்து மற்ற சொத்துக்கள் அனைத்தும் நாராணப்ப நாயக்கர் மகன் சங்கரப்ப நாயக்கருக்குப் பூர்வீகமாகப்பாத்தியப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் தாவாச்சொத்திற்கு கூட்டுப்பட்டாவில் இருக்கிற மற்ற தரப்பினர்களை கட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். இறந்துபோன சங்கரப்ப நாயக்கரின் பெண் மக்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் அவரின் பெண் மக்கள் 1948 ல் மற்ற ஆண் மக்களுக்கு விடுதலை கொடுத்துள்ளார்கள். நான் அவ்வாறு சொல்லும் ஆவணம் வா.சா.ஆ.6 என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் சங்கரப்ப நாயக்கர் மட்டும் கையெழுத்து போட்டுள்ளார்கள் மற்ற பெண் மக்கள்

கையொப்பமிடவில்லை என்றால் சரிதான். எனது பிராதில் சங்கரப்ப நாயக்கரின் வழக்கு தபசிலிலும் மற்ற சொத்துக்களிலும் பங்கு வேண்டாம் என்று அவரின் பெண்மக்கள் விடுதலை கொடுத்தாகசொல்லவில்லை என்றால் சரிதான். சங்கரப்ப நாயக்கரின் பெண்மக்களுக்குஅசையும் சொத்துக்களாகவோ அசையா சொத்துக்களாகவோ கொடுக்கவில்லை என்றால் கொடுக்கவில்லை. சங்கரப்ப நாயக்கருக்கு பூர்வீகமாகப்பாத்தியப்பட்ட சொததுக்கள் தாவாச்சொத்துக்கள் உட்பட 100 ஏக்கர் நிலம் இருக்கும் என்றால் சரிதான். சங்கரப்பநாயக்கர் பிராது தபசில் சொத்துக்ளையும் வேறு சொத்துக்களையும் அனுபவம் செய்து வந்து 23.01.1957 ல் இறந்துபோனதாக எனது பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

3) சங்கரப்ப நாயக்கர் தனது ஆண் மக்கள் வீரப்ப நாயக்கர், சுப்பையா,நாராயணசாமி,கந்தசாமி ஆகியோர்கள் 01.05.1948 ல் தனது பாகத்தை விடுதலை செய்துகொடுத்துவிட்டார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவர் 1948 ல் பாகவிடுதலை கொடுத்துவிட்டதாகசொல்லுவது உண்மையா அல்லது 1957 வரை அனுபவம் செய்து வந்தாக சொல்லுவது உண்மையா என்றால் இரண்டும் உண்மை தான். அச்சம்மாள் மகள் லட்சுமியம்மாளுக்கு பாகம் எதுவும் கொடுத்தாக எனதுபிராதில் சொல்லவில்லை என்றால் அவர்களுக்குபாகம் கிடையாது. எனது கூற்றுப்படிசங்கரப்ப நாயக்கர் 1948 பாகப்பிரிவினை ஆவணத்தின்படி அவரின் ஆண் மக்களுக்கு தாவாச்சொத்து உட்பட மற்ற சொததுக்கள் பாத்தியம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.16.04.1959 ல் நான் பிறக்கவில்லை என்றால் பாகப்பிரிவினைபற்றி எனதுஅப்பா சொன்னார். 1959 ஆம்ஆண்டு பாகப்பிரிவினை பற்றி யாருக்கு தெரியும் என்றால எனது பங்காளிகளுக்குதெரியும். மேற்படி பங்காளிகளை எனது தரப்பில் விசாரிக்க போகிறேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் ஆலோசித்து சொல்லுகிறேன். சங்கரப்ப நாயக்கர் மகன் லேட்.வீரப்ப நாயக்கருக்கு என்ன என்ன சொத்துக்கள் சர்வே எண்ணுடன் சொல்ல முடியுமா என்றால் ஞாபகமில்லை இந்த சொத்தில் பங்கு கொடுத்தார்கள். சுப்பையா நாயக்கர், வீரப்ப நாயக்கர், நாராயணசாமி,கந்தசாமி ஆகியோர்களுக்கு என்ன என்ன சொததுக்கள் பாகத்தில் கொடுக்கப்பட்டது எனறால் சர்வே எண் ஞாபகமில்லை மற்ற விவரங்கள் தெரியும். மற்றவிவரங்கள் பரப்பளவுசொல்லமுடியுமா என்றால் ஞாபகமில்லை. வீரப்ப நாயக்கருக்கு சர்வே எண்.302/2 தவிர வேறு நிலங்களும் கொடுக்கப்பட்டது என்றால்

உண்மை தான். என்னுடைய கட்சி என்பது வீரப்பநாயக்கரின் பெண்மக்களுக்கும் அவருடைய வாரிசுகளுக்கும் பங்கு இல்லை என்பதாகும் என்றால் சரிதான். சர்வே எண்.302/1 என்ற தாவாச்சொத்தை நாராயணசாமிக்கும், அய்யலுசாமிக்கும் பாகம் கொடுத்தார்கள் என்பதற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை வாய்மொழியாக கொடுத்தார்கள்.அது உண்மையா என்பதை சங்கரப்ப நாயக்கரின் இதர வாரிசுகளை விசாரித்தார் தெரியும் என்றால சரிதான். சங்கரப்ப நாயக்கர்சொத்துக்களை பொறுத்து நடைபெற்ற பாகப்பிரிவினை 1ம்பிரதிவாதி மற்றும் 3 முதல் 7 பிரதிவாதிகளுக்கும் மற்ற வாரிசுகளுக்கும் தெரியுமா என்றால் தெரியும்.

4) அவர்களை எனது தரப்பில் சாட்சியாக விசாரணை செய்யலாமா என்றால் செய்யலாம். 2ம்பிரதிவாதி தரவிர மற்ற பிரதிவாதிகள் எனக்கு வேண்டிய நபர்கள் என்பதால் தான் அவர்களைமட்டும் கட்சியாக சேர்த்துள்ளேன் என்றால் அவர்கள் வேண்டிய நபர்கள் இல்லை. மற்ற பங்காளிகள் கூட்டாளியாக சேர்ந்து 2ம்பிரதிவாதி கிரையம் பெற்றதாவா 3 வது தபசில் சொததை அபகரிக்க வேண்டுமென்ற நோக்கத்தில் மற்ற பிரதிவாதிகளுடன் கூட்டு சேர்ந்து ஒரு சர்வே எண்ணிற்கு மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. அவருக்கும் எனக்கும் முன் விரோதம் உள்ளது. சொத்து எனது அனுபவத்தில் உள்ளதாக சொல்லிவிட்டு மாற்று பரிகாரமாக 2ம்பிரதிவாதியிடம் சொத்தை பெற்று வாழ்விப்புசெய்யவேண்டுமென்று கோரியுள்ளது ஏற்புடையதுஅல்ல என்றால் சரியல்ல. தாவா 3 வது அயிட்ட சொத்து 1ம்பிரதிவாதிக்குகொடுக்கப்பட்ட சொத்து என்பதால் தான் தாவாச்சொத்தின் கூட்டுப்பட்டாவில் 1ம்பிரதிவாதியின் பெயர் இடம் பெற்றுள்ளது என்றால் இல்லை. அதன் அடிப்படையில்தாவாச்சொத்தின் ஒரு பகுதியை 2ம்பிரதிவாதி பணம் கொடுத்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. 2ம்பிரதிவாதியின் சொத்து உரிமையை அபகரிக்கும் நோக்கத்தில் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2ம்பிரதிவாதியின் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இலலை. எனது வழக்குதள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல. தாவாச்சொத்திற்கு சர்வே எண்.302/4ல் தான் கிணற்று பாசனம் உள்ளது என்றும்2ம்பிரதிவாதிக்கு போதிய ஆவண அறிவு இல்லாததால் தனது கிரைய ஆவணத்தில் சர்வே எண்.302/4 உள்ள கிணற்று பாசனத்தை பற்றி தெளிவாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
03.09.2025.